**சிலோன் ஷிபிங் கோபரேஷன் லிமிடெட் கம்பெனி - 2016**

---

சிலோன் ஷிபிங் கோபரேஷன் லிமிடெட் கம்பெனியின் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத் தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2016 ஆம் ஆண்டு மார்ச் 31 அந் திகதியில் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இந்த கணக்காய்வினை மேற்கொள்வதற்காக பிரசித்தி பெற்ற தொழிலில் ஈடுபட்டுள்ள பட்டயம் பெற்ற ஒரு கணக்காளர் கம்பெனி எனக்கு உதவி செய்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(6) உறுப்புரை பிரகாரம் என்னால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதப்படும் மீளாய்விற்கான ஆண்டில் கம்பெனியின் செயற்பாடுகள் தொடர்பிலான எனது அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிகூற்றுகளிற்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுகளை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளிலிருந்து விடுப்பட்ட நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கு அவசியமானதென நிர்ணயிக்கின்ற உள்ளக கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுகளின்மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுகள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுகளிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுகளின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம்மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தனை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுகளைத் தயாரித்தல் மற்றும் நியாயாமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளக கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. பணிப்பாளர் சபையால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக் கூற்றுகள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக் கூற்றுகளிலிருந்து 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆந் திகதியில் கம்பெனியின் நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக அதனது நிதிசார் செயலாற்றினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தரநியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**விடயங்களை வலியுறுத்தல்**

எனது அபிப்பிராயத்தின் முனைப்பழியினை மேற்கொள்ளாது, நிதி கூற்றுகளுக்கான குறிப்புகள் இலக்கம் 13 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தொழிற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளாத, கலைப்பதற்கான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள துணைக் கம்பெனியான சிலோன் ஷிபிங் ஏஜன்சி (தனியார்) கம்பெனியின் கணக்குகளை இணைக்கும்போது, கவனத்தில் கொண்டு கணக்கீட்டு கூற்றுகளை தயாரிக்கப்பட்டிருக்காமை மீது கவனம் செலுத்தப்படுகின்றது.

#### 2.1.1 ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை

2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தில் 163(2) பிரிவு பிரகாரம் என்னால் பின்வரும் விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படை, கணக்காய்வின் விடயவெல்லை மற்றும் மட்டும்படுத்தல்கள் மேற்படி குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

(ஆ) கணக்காய்விற்கு தேவையான எல்லா தகவல்களையும் தெளிவுபடுத்தல்களையும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதெனவும், எனது பரிசோதனையில் அறிய வருகின்ற வகையில் கம்பெனியால் முறையாக கணக்கீட்டு அறிக்கைகள் பேணிச் செல்லப்பட்டுள்ளதெனவும்,

கம்பெனியின் நிதி கூற்றுகள் 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தில் 151 ஆவது பிரிவில் காட்டப்பட்டுள்ள தேவைகள் என்பவற்றுக்கு இணங்குகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுகள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டு கொள்கைகள்

கம்பெனியில் வருமானம் அடையாளம் காணப்படும் கொள்கைக்கு அமைவாக, வருமானம் அதற்கு ஏற்புடையதான இன்வொயிஸ் திகதியைக் கொண்டு அடையாளம் காணப்படினும், கப்பல் முகவர் சேவை வருமானத்தை அடையாளம் காணுகையில் பணம் கிடைக்கப்பெறும் திகதியை அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி வருமானம் அடையாளம் காணும்போது திரண்ட அடிப்படை பின்பற்றப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 கணக்கு விடயங்களுக்கு ஏற்புடையதாக 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அந் திகதியில் நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்த மீதிகள் மற்றும் அதற்கான அட்டவணைகளை ஒப்பிடும்போது ரூபா. 51,779,904 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. கம்பெனியால் உபயோகப்படுத்திய கணக்கீட்டு முறைமையில் காணப்பட்ட குறைப்பாடுகள் காணரமாக இந்த வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளதென முகாமைத்துவத்தால் காட்டப்பட்டிருப்பினும், பல ஆண்டுகளாக கணக்கீட்டு முறைமையில் இருந்து வரும் இந்த குறைப்பாடுகளை சரி செய்வதற்கு மீளாய்விற்கான ஆண்டிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) வங்கி கணக்குகளுக்கிடையில் நிதி பரிமாற்றத்திற்காக உபயோகப்படுத்திய ''நிதி பரிமாற்ற கணக்கில்'' (Transfer of Fund Account) மீதி பூஜ்ஜியமாக இருத்தல் வேண்டுமாயினும், அந்த கணக்கில் ரூபா.3,697,466 ஆன மீதி பல ஆண்டுகள் தொடக்கம் முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

(இ) கம்பெனியின் வங்கி கணக்கிற்கு ஏற்புடையதாக வங்கி கணக்கிணக்க கூற்றில் 2009 ஆம் ஆண்டு யூலை மாதம் தொடக்கம் காணப்படும் ரூபா.519,516 ஆன தொகை அடையாளம் காணப்படாத வைப்பாக இருந்ததுடன், இந்தப் பெறுமதியை அடையளாம் காணப்பட்டு சீராக்குவதற்கு மீளாய்விற்கான ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை.

நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்த பின்வரும் கணக்கு மீதிகளின் முன்பாக காட்டப்பட்டுள்ள சாட்சிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| விபரம் | பெறுமதி<br>ரூபா. | சமர்ப்பிக்கப்படாத சாட்சிகள் |
|---|---|---|
| கடனாளிகள் ( 10 மீதிகள்) | 824,217,759 | மீதி உறுதிப்படுத்தல் |
| வெளிநாட்டு கடன் வழங்குநர்கள் ( 1 மீதி ) | 167,734,959 | மீதி உறுதிப்படுத்தல் |
| வெளிநாட்டு முகவர்களிடம் செலுத்தப்பட வேண்டிய 05 மீதிகள் | 14,698,302 | மீதி உறுதிப்படுத்தல் |
| இணையத்தளம் மற்றும் தொலைபேசி வசதிகளை வழங்குதல் பொருட்டு ரூபா. 319,119 ஆன மாதாந்த நிலையான கட்டணம் | 3,829,428 | சேவை வழங்குநர் மற்றும் கம்பெனிக் கிடையிலான உடன்படிக்கை |

## 2.2.4 செலுத்தப்பட வேண்டிய பொறுப்புகள்

லங்கா கோல் கம்பெனியால் கொள்வனவு செய்யப்பட்ட 85,991 மெட்ரிக் தொன் நிலக் கரி ஷிபிங் கோபரேஷன் லிமிடெட் கம்பெனியால் புத்தளத்திற்கு கொண்டுச் சென்றிருப்பினும், சீரற்ற காலநிலை காரணமாக உரியவாறு தரையில் இறக்குவதற்கு முடியாத காணரத்தால் இந்த நிலக்கரி தொகையினை மீண்டும் வழங்கும் அடிப்படையின்மீது இந்திய கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் கம்பெனிகளுக்கிடையில் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கை பிரகாரம் 05 தவணைகளில் நிலக் கரி தொகையினை மீண்டும் வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆந் திகதியில் மேலும் வழங்க வேண்டியிருந்த 29,896 மெட்ரிக் தொன் நிலக் கரியின் தரம் தொடர்பாக இணக்கமின்மை ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக நிலக் கரி தொகையினை மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் வழங்க முடியாதிருந்ததுடன், இந்த நிலக் கரி தொகையினை சம்பந்தப்பட்ட வழங்குநர்மூலம் வழங்குதல் தொடர்பில் கம்பெனிக்கு ஏற்பட்டிருந்த செலுத்தப்பட வேண்டிய பொறுப்பு தொடர்பாக நிதி கூற்றுகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் முன் கொண்டு வரப்பட்ட மொத்தம் ரூபா 69, 544 ஆன வரவு மீதி 03 ம், மொத்தம் ரூபா.4,354,402 ஆன வரவு மீதி 02 ம் மீளாய்விற்கான ஆண்டு இறுதியாகும்போதும் சீராக்கப்படவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆந் திகதியில் நிலவிய வியாபார கடனளிப்பு மீதி 1,191.27 மில்லியன் ரூபா ஆனதுடன், அதில் நூற்றுக்கு 31 அல்லது 366.6 மில்லியன் ரூபா 04 ஆண்டுகளுக்கு அதிகமான காலப் பகுதியிலிருந்து நிலுவையாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது. இந்த கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாது முழுமையான பெறுமதியின் பொருட்டு இழப்பீடுகளை சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) கம்பெனியால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் அதிகமாக அனுப்பியிருந்த 21.54 மில்லியன் ரூபா பெறுமதியிலான பொருட்கள் மற்றும் சேவைகள் வரி, தேசிய பாதுகாப்பு வரி நியதிச்சட்ட அறவிடுதலாக நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது. 16 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் தொடக்கம் முன்கொண்டு வரப்படும் அந்த தொகையினை அறவிடுதல் தொடர்பாக நிச்சயமற்ற நிலைமை காணப்பட்டது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கு இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் தொடர் | இணங்காமை |
|---|---|---|
| (அ) | அரச தொழில்முயற்சி சுற்றுநிருபம் | |
| (i) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் மற்றும் இருப்புகள் தொடர்பில் 2016 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக மீளாய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. கணக்காய்வு பரிசோதனைகளின்போது காணமல்போன இன்வென்ட்ரி பொருட்கள் மற்றும் உரியவாறு குறியீடு மேற்கொள்ளப்படாத சொத்துக்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ii) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க சுற்றறிக்கையில் 8.3.4 பிரிவு மற்றும் 2015 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதிய பீஈடீ 2/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கை பிரகாரம் எல்லா தொடர்பாடல் கட்டணங்களின் பொருட்டும் ஆகக்கூடிய உச்சவெல்லைகள் நிருணயிக்கப்பட்டிருப்பினும், மீளாய்விற்கான ஆண்டில் கம்பெனியால் 10 ஆலுவலர்களுக்கு உரிய எல்லை கடந்து ரூபா.514,228 ஆல் இரசீதுகளுக்கான கட்டணங்களை மீளளிப்புச் செய்திருந்ததுடன், அந்த அதிக செலுத்தல்களை மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. |
| (iii) | 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ 1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றுநிருபத்தின் 03 பந்தி பிரகாரம் அந்தந்த அலுவலர்கள் தொகுதிகளுக்கு மாதாந்த எரிபொருள் எல்லைகளை விஞ்சி மீளாய்விற்கான ஆண்டில் 11 அலுவலர்களின் பொருட்டு ரூபா.598,806 ஆன எரிபொருள் அல்லது எரிபொருள் படி பணிப்பாளர் சபையின் அனுமதிக்கமைவாக வழங்கப்பட்டிருந்தது. |

| | |
| --- | --- |
| (ஆ) முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை<br>-----------------------<br>2015 திசெம்பர் 09 ஆந் திகதிய 2/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றுநிருபத்தில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் வகைப்படுத்தலின் பிரகாரம் தமது கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதியின்பேரில் 2015 ஆம் ஆண்டில் ஒரு ஊழியருக்கு செலுத்தப்பட வேண்டிய வருடாந்த போனஸ் கொடுப்பனவு தொகை ரூபா 13,500 ஆயினும், கம்பெனியால் மீளாய்விற்கான காலப் பகுதியில் இரண்டு சந்தர்ப்பங்களில் ஒருவருக்கு ரூபா.48,500 ம் படி போனஸ் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா.35,000 ம் என்ற வகையில் மேலதிகமாக போனஸ் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. |

## 2.5 போதியளவு அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்

------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 செப்தெம்பர் 15 ஆந் திகதிய 58(2) இலக்க அரசாங்க தொழில்முயற்சி சுற்றுநிருபம் பிரகாரம் கம்பெனியின் தலைவருக்கும் நிறைவேற்று பணிப்பாளருக்கும் செலத்தப்பட வேண்டிய மாதாந்த கொடுப்பனவு ஒழுங்குமுறையாக ரூபா. 60,000 ம் மற்றும் ரூபா.45,000 ம் ஆவதுடன், 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதிய பீஈடீ 3/2015 ஆம் இலக்க அரச தொழில்முயற்சி சுற்றுநிருபம்மூலம் அந்தக் கொடுப்பனவு 2015 ஆம் ஆண்டு யூலை 01 ஆந் திகதி தொடக்கம் ஒழுங்கு முறையாக ரூபா. 80,000 ம் மற்றும் ரூபா.65,000 ம் என்ற வகையில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. ஆயினும் பணிப்பாளர் சபையால் 2007 ஆம் அண்டில் மேற்கொண்ட தீர்மானம்படி தலைவருக்கும் நிறைவேற்று பணிப்பாளருக்கும் ஒழுங்கு முறையாக ரூபா. ரු.85,000 ம் மற்றும் ரூபா. 75,000 ம் என்ற வகையில் மாதாந்த கொடுப்பனவு செலுத்தியதன் காரணமாக மீளாய்விற்கான ஆண்டில் ரூபா.300,000 ம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மேற்படி (அ) இல் காட்டப்படும் அரச தொழில்முயற்சி சுற்றறிக்கை பிரகாரம் சுற்றுநிருபத்தில் காட்டப்படும் கொடுப்பனவு தவிர்ந்த வேறு எதுவித கொடுப்பனவுகளும் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையிடம் செலுத்தப்படுதல் ஆகாது என்று அறிவிக்கப்பட்டிருப்பினும், அதற்கு முரணாக முன்னரான ஆண்டில் பணிப்பாளர் சபையால் மேற்கொண்ட தீர்மானம் பிரகாரம் கம்பெனியால் தலைவருக்கும் நிறைவேற்று பணிப்பாளருக்கும் ஒழுங்கு முறையில் ரூபா.100,000 ம் மற்றும் ரூபா.50,000 ம் என்ற உச்சவெல்லைக்கமைவாக கடன் அளிப்பு பத்திரம் (Credit Card Allowance) அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்விற்கான ஆண்டில் அந்த கடன் பத்திரம் பொருட்டு கம்பெனியால் ரூபா.882.321 செலவிடப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதி கூற்றுகளின்படி, 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக கம்பெனியின் நிதிசார் விளைவு ரூபா 74,317,129 ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு தொடர்புடையதாக கடந்த ஆண்டின் நிதிசார் விளவைு ரூபா. 124,942,025 ஆன மிகை காணப்பட்டதால் மீளாய்விற்கான ஆண்டில் நிதிசார் விளைவு ரூபா.50,624,896 ஆல் அதாவது நூற்றுக்கு 40.5 ஆன வீழ்ச்சி காணப்பட்டது. மீளாய்விற்கான ஆண்டில் நேரடி தொழிற்பாட்டு செலவு கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா.126,094,264 ஆல் அல்லது நூற்றுக்கு 93 ஆல் அதிகரித்தல் மற்றும் தேறிய செலாவணி நட்டம் ரூபா.23,309,445 ஆதல் மற்றும் ஏனைய வருமானம் ரூபா.46,524,605 ஆல் அதாவது நூற்றுக்கு 126.8 ஆல் குறைவடைதல் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாகியது.

மீளாய்விற்கான ஆண்டு மற்றும் கடந்த 04 ஆண்டுகள் தொடர்பாக நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்கையில் 2011/2012 கணக்கு ஆண்டு தொடக்கம் 2013/2014 ஆண்டு வரை நிதிசார் விளைவில் தொடர்ச்சியான விருத்தி காணப்படினும், 2013/2014 ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டின் நிதிசார் விளைவு நூற்றுக்கு 50 ஆலும், மீளாய்விற்கான ஆண்டில் நிதிசார் விளவைு நூற்றுக்கு 70 ஆலும், வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும், நிதிசார் விளைவில் ஊழியர் ஊதியம், அரசாங்கத்திற்கு செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்கள் தொடர்பான தேய்மானம் சீராக்கும்போது 2011/2012 கணக்கு ஆண்டில் 242 மில்லியன் ரூபாவிலான பங்களிப்பு 2015/2016 கணக்கு ஆண்டில் 375.6 மில்லியன் ரூபா வரை தொடர்ச்சியாக விருத்தியடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வுடன்கூடிய நிதிசார் மீளாய்வுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதி கூற்றுகளின்படி கம்பெனியின் நிலக் கரி தொழிற்பாட்டு வருமானம் (Agency & Address Commission) கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 47 அல்லது ரூபா. 208,829,325 ஆல் விழ்ச்சியடைந்திருந்தது. இதற்காக லங்கா கோல் கம்பெனியால் செலுத்தப்படும் நிலக் கரி மெட்ரிக் தொன் ஒன்றுக்குரிய கொமிஸ் பணம், 15 அ.டொலர் தொடக்கம் 11.5 அ.டொலர் வரை குறைவடைதல் அடிப்படை காரணமாகியது.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட நிதி கூற்றுகளின்படி கம்பெனியின் நேரடி செலவு கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 93 அல்லது ரூபா. 126,094,264 ஆல் வளர்ச்சியடைந்திருந்தது. கம்பெனியால் கொள்வனவு செய்யப்பட்ட சிலோன் பிரிஸ் கப்பலின் எரிபொருள், பணிற்றொகுதியினரின் செலவு அடங்கலாக தொழிற்பாட்டு செலவுக்காக 83.7 மில்லியன் ரூபா செலவை மேற்கொள்ளுதல் இதற்கு காரணமாக அமைந்தது.

(இ) **விகிதாசார பகுப்பாய்வு**

மீளாய்விற்கான ஆண்டு மற்றும் கடந்த ஆண்டுக்கான பொருண்மையான விகிதாசாரங்களும் சதவீதங்களும் பின்வருமாறாகும்

| | 2015/16 | 2014/15 |
|---|---|---|
| மொத்த இலாபம் (நூற்றுக்கு) | 58 | 78 |
| தேறிய இலாபத்தின் விகிதாசாரம் (நூற்றுக்கு) | 12 | 20 |
| பயன்படுத்திய மூலதனத்திற்கு இலாபம் (நூற்றுக்கு) | 1 | 3 |
| கடன் சேர்க்கும் காலம் - திகதி | 705 | 684 |
| கடன் தீர்க்கப்படல் காலம் - திகதி | 1001 | 1922 |
| நடைமுறை விகிதாசாரம் | 1.07:1 | 2.08:1 |
| உடனடி மூலதன விகிதாசாரம் | 1.02:1 | 2.08:1 |
| நீண்டகால மூலதனமயப்படுத்தல் விகிதாசாரம் | 0.80 | 0.69 |
| மூலதன பங்கிற்கான கடன் விகிதாசாரம் | 6.31 | 3.66 |

(i) மொத்த இலாப விகிதாசாரம் வீழ்ச்சியடைதல்

---------------------------------------------------------

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கான ஆண்டில் மொத்த வருமான விகிதாசாரம் நூற்றுக்கு 26 ஆல் வீழ்ச்சியடைந்திருந்ததுடன், வருமானம் குறைவடைதல் மற்றும் நேரடி செலவு நூற்றுக்கு 93 ஆல் அதிகரித்தல் இதற்கு காரணமாகயிருந்தது.

(ii) **பயன்படுத்திய மூலதனத்திற்கு விளைவுகளின் விகிதாசாரம் குறைவடைதல்**

----------------------------------------------------------------------------------------------------------------

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கான ஆண்டில் பயன்படுத்திய மூலதனத்திற்கு விளைவுகளின் சதவீதம் நூற்றுக்கு 03 தொடக்கம் நூற்றுக்கு 1 வரை குறைந்திருந்ததுடன், கப்பல்களை கொள்வனவு செய்வதற்காக மக்கள் வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்டிருந்த 8,219 மில்லியன் ரூபாவிலான கடன் தொகை இந்த வீழ்ச்சிக்கு காரணமாகியிருந்தது.

(iii) கடன் சேர்க்கும் காலம்

-------------------------------

மீளாய்விற்கான ஆண்டில் கம்பெனியின் வருவாய்க்கு எதிரான கடன் காலம் 705 தினங்களாவதுடன், கடந்த ஆண்டில் அது 684 நாட்கள் ஆகின. கடனாளிகள் தொடர்பாக முறையான நிருவாக முறையினை பின்பற்றியிருக்காமை வருவாய்க்கு எதிரான கடன் காலம் நீடிப்பதன் மீது காரணமாகியுள்ளதுடன், அறவிட முடியாக் கடன் அல்லது நிச்சயமற்றக் கடன் ஒதுக்கீடுகளை மேற்கொண்டு மீளாய்விற்கான ஆண்டில் கடனாளிகளிடமிருந்து நூற்றுக்கு 31 ம், முன்னரான ஆண்டில் கடனாளிகளிடமிருந்து நூற்றுக்கு 27 ம் சேதங்களின் பொருட்டு ஒதுக்கப்படுதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---

### 4.1 செயலாற்றல்

---

#### 4.1.1 கம்பெனியின் அடிப்படை நோக்கங்கள்

---

இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் சங்க அமைப்பு விதிக் குறிப்புக்கு அமைவாக கம்பெனியின் அடிப்படை நோக்கங்கள் சாராம்சமாக பின்வருமாறு ஆகும்.

(i) கப்பல் உரிமையளார், பயணிகள், சரக்கு கப்பல்கள் இயக்குபவர், தரகர், முகவர், முகாமையாளர், ஆலோசகர், காப்பீட்டு, பொது தரகர், சரக்கு பரிமாற்றுபவர், கப்பல் சரக்கு தீர்வு நடவடிக்கைகள் மற்றும் சரக்கு அனுப்புபவராக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

(ii) கப்பல் மற்றும் வீதி போக்குவரத்து சேவைகளை ஏற்படுத்தல், போக்குவரத்து சேவைகளை ஏற்படுத்தல், பேணுதல் மற்றும் நடாத்திச் செல்லுதல்

(iii) கப்பல்கள் அல்லது பிற கப்பல்கள் அல்லது பிற போக்குவரத்து முறைகளை கொள்முதல் செய்தல், விற்பனை செய்தல், வாடகைக்கு எடுத்தல், உருவாக்குதல் அல்லது கையகப்படுத்தல் மற்றும் ஆழமான கடல், ஆறுகள், கால்வாய்கள் அல்லது கடலேறிகள் சார்ந்து உலர்ந்த இருப்புகள், மரம் மற்றும் வாயுப் பொருட்களை போக்குவரத்துச் செய்தல்

(iv) பல்வகை போக்குவரத்து முறைகளை கொள்முதல் செய்தல், விற்பனை செய்தல், வாடகைக்கு எடுத்தல், நிருமாணித்தல் அல்லது கையகப்படுத்தல் மற்றும் பொருட்களை போக்குவரத்து செய்தல்

(v) சுற்றுலாத்துறை முகவராகவும் ஒப்பந்தக்காரராகவும் வியாபாரங்களை மேற்கொள்ளுதல், போக்குவரத்து வசதிகளை அளித்தல் மற்றும் ஊக்குவித்தல்

(vi) கப்பல்கள் மற்றும் ஏனைய பல்போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்பான வியாபாரங்களில் முகவராக, முகாமைத்துவ முகவராக, தரகராக செயற்படுதல்

(vii) கப்பல் தொகுதியினை தாபித்தல் மற்றும் இயக்குதல், அல்லது பயணித்தல் அல்லது வேறு பல்வகை போக்குவரத்து முறைகளை ஏற்படுத்துவதற்கு அனுமதிப்பத்திரங்கள் அல்லது இணக்கப்பாடுகளை பெற்றுக்கொள்ளுதல்

(viii) பயணிகளுக்கும் சுற்றுலாத் துறையினறுக்கும் நீர் சார்ந்த பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் அதனைச் சார்ந்த சேவைகளை வழங்குதல் தொடர்பான வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட வகையில் கம்பெனியின் அடிப்படை நோக்கங்களில் சில நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதன் மீது கவனம் செலுத்தப்படவில்லையென்பதுடன், 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் செயற்றிட்டம்படி குறைந்த கவனம் செலுத்தப்பட்டிருந்த நோக்கங்கள் சாராம்சமாக குறிப்பிடப்படுகின்றன.

(i) பல்வகை போக்குவரத்து முறைகளை கொள்முதல் செய்தல், விற்பனை செய்தல், வாடகைக்கு எடுத்தல், குத்தகைக்கு விடுதல், நிருமாணித்தல் அல்லது வேறு முறையில் கையகப்படுத்தல் மற்றும் எந்தவொரு வகையிலுமான பொருட்களை போக்குவரத்துச் செய்தல்

(ii) சுற்றுலாத்துறை முகவராகவும் ஒப்பந்தக்காரராகவும் வியாபாரங்களை மேற்கொள்ளுதல், சுற்றுலாத் துறையினறுக்கு அல்லது பயணிகளுக்கு போக்குவரத்து வசதிகளை அளித்தல் மற்றும் அது தொடர்பாக ஊக்குவித்தல்

(iii) பயணிகளுக்கும் சுற்றுலாத் துறையினறுக்கும் நீர் சார்ந்த பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் அதனைச் சார்ந்த சேவைகளை வழங்குதல் தொடர்பான வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**4.2** முகாமைத்துவ செயற்பாடுகள்

---

கம்பெனியால் மீண்டும் அறிவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாத 05 ஆண்டுகள் தொடக்கம் 38 ஆண்டுகள் வரையிலான ரூபா. 5,000 ம் தொடக்கம் ரூபா. 5,00,000 வரையிலான எல்லைக்குள் இருந்த மொத்தம் ரூபா. 2,276,287 ஆன பாதுகாப்பு வைப்புகள் மற்றும் 22 முற்பண மீதிகள் இருந்தன. இந்த மீதிகள் ஆண்டுக்குள் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையென்பதுடன், இழப்பீடுகள் ஒதுக்கப்படவுமில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைப்பாடுகள் கம்பெனியின் தலைவரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டு வரப்பட்டதுடன், பின்வரும் முறைமைகளும் கட்டுப்பாட்டு துறைகளும் மீது விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

| | முறைமைகளும் கட்டுப்பாட்டு துறைகளும் | அவதானிப்புகள் |
|---|---|---|
| (i) | நிதி நிருவாகம் | (i) அடையாளம் காணப்படாத வங்கி வைப்புகள் இருத்தல்<br>(ii) செல்லுபடியான காலம் கடந்த காசோலைகள் இருத்தல்<br>(iii)சில்லரைப் பணம் கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் இருத்தல் |
| (ii) | வாகனங்களின் கட்டுப்பாடு | (I) லொக் குறிப்பு புத்தகங்கள் முறையாக இருக்காமை<br>(II)எரிபொருள் வழங்குதல் அட்டவணைப்படுத்தல் தொடர்பாக முறையான கண்காணிப்பு இருக்காமை |
| (iii) | தொழில்நுட்ப தகவல் முறைமை | (I)தகவல் முறைமையின் பேணுதல் மற்றும் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளாமை |

| | | |
|---|---|---|
| | | 1I) கம்பெனியின் தேவைகளுக்கு பொருந்தாமை |
| (iv) | கடன் வழங்குநர் மற்றும் கடன் கொடுநர் கட்டுப்பாடு | அறவிடல் மற்றும் செலுத்தலில் தாமதம் இருத்தல் |